ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

கண், காதுமுதலிய கருவிகளுக்கு சூர்யன்முதலியவர்கள் அபிமானி தேவதைகளாம். அவர்களது அனுக்கிரஹமிருந்தால் அந்த இந்திரியங்களுக்கு யாதொரு குறையுமுண்டாகாதாம். அவர்களுடைய அனுக்கிரஹமில்லாமற்போனால் விஷயங்களை கிரஹிக்கும் ஸாமர்த்தியம் அவைகளுக்கு இல்லாமற்போய்விடுமாம். கண் குருடாய்விடவேண்டுமென்றாவது காது செவிடாய்விடவேண்டுமென்றாவது இவைபோல் மற்ற இந்திரியங்கள் சக்தியற்றவைகளாகட்டுமென்றாவது யாருமாசைப்படுவதில்லை. ஆயினும் அவைகள் கெடுதலையடைந்துவிடுகிறது. அது அபிமானிதேவர்களின் பிரஸாதக் குறைவாலாம். அப்படியாகும்போது அந்த அபிமானிதேவர்களை யாராதித்து அவர்களது பிரஸாதத்தை யடையவேண்டுமாம் என்று சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது. இந்த இரஹஸ்யம் சாஸ்திரவிசாரம் செய்தவர்களுக்குத்தான் தெரியும். புத்திரபாக்கியம் பெறுவதற்கு பிதிருக்களின் பிரசாதமே காரணம். அதனாற்றான் நம்முன்னோர்கள் சிராத்தாதிகளால் பிதிருதேவதைகளை யாராதித்துப் பூர்ணமாகப் புத்திரபாக்கியத்தை யடைந்தார்களென்பது அவர்களது சரித்திர ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. இந்தஸூக்ஷ்மம் தெரியாமல் சிலர் சிராத்ததர்மத்தை ஆக்ஷேபிக்கிறார்கள். பிதிருதேவதைகளை நிராகரித்துவிட்டு புத்திரஸந்தானம் கிடைக்கவேண்டுமென்று நாகப்பிரதிஷ்டை, ஸர்ப்பசாந்தி முதலிய கார்யங்களைச் செய்கிறார்கள். பிதிருசாபம் பலமாயிருப்பதால் இந்தக்கார்யங்கள் பயனற்றவைகளாய்விடுகின்றன. அப்பொழுது "இந்தக்கார்யம் செய்தானே, என்ன பயனடைந்தான்" என்று இத்தகைய கர்மங்களிலும் சிலருக்கு சிரத்தையில்லாமற்போய்விடுகிறது. எந்தப்பயனுக்கு எது பிரதிபந்தகமாயிருக்கிறதோ அதை முதலில் விலக்கிக்கொண்டு அதற்குரிய ஸாதனங்களில் பிரவிருத்திசெய்தால் அது பயனையளிக்கும். ஸர்வகார்யங்களிலும் பிரதிபந்தகமில்லாமலிருப்பதையும் காரணமாக அங்கீகரித்திருக்கிறார்கள். சோதிடநூல்களிலும் புத்திரப்பிரதிபந்தகத்தைக் கூறுமிடத்தில் பிதிருக்களையும் பெரியப்பிரதிபந்தகமாகக் கூறப்பட்டிருக்கிறது, அதற்கு பரிஹாரம் கூறுமிடத்திலும் சிராத்தகர்மாவைச் சிறந்த பரிஹாரமாகக் கூறுகிறார்கள். ஆகவே இந்திரியபுஷ்டியும், புத்திரஸம்பத்து முண்டாவதற்குப் பிதிரு திருப்திசெய்வதே பரமஸாதனமாகும். ஆகையால் பரமப்பிரமாணமாகிய சுருதிவிதிக்கிறபடியும், பிராசீன ஆசாரப்படியும் நம்முன்னோர்கள் போலத் தற்காலத்தியவர்களும் சிரத்தைபக்தியுடன் சிராத்தகர்மாவைச் சரிவர அனுஷ்டித்து சகலப் பிரதிபந்தங்களையும் விலக்கிக்கொண்டு புத்திரபாக்யம்பெற்று இஹத்திலும் பரத்திலும் சுகத்தையடைவார்களாக.

சுபம்

———

பத்திராதிபர்.

உ
# ஆர்யதர்மம்.
பிரமோத-ஹூ ஆவணி-மீ உ௬உ

## சிராத்தம்.

(390-வது பக்கத்தொடர்ச்சி.)

அந்தஸமயத்திலேற்பட்ட சரீரமானது இங்கிருந்து லோகாந்தரம் செல்லும்வரையிலுள்ள மார்க்கமத்தியில் கொஞ்சங்கொஞ்சமாக அங்கப்பிரத்யங்கங்கள் விருத்தியடைந்து லோகாந்தரம் பிரவேசிக்குந்தருணத்தில் ஸர்வலக்ஷணபூர்ணமான தேகமாகின்றது. இந்த தேகத்தை யாதனாதேகமென்றுங் கூறுவதுண்டு. இத்தேகத்தைப்பற்றித்தான் கீழ்க்கண்ட யஜுர்வேதவாக்கியம் கூறுகின்றதேயொழிய இங்குள்ள தேவதத்தாதிசரீரத்தைப்பற்றியதல்ல, இங்கேயே 12நாளுக்குள்ளேயே வேறு புதிய சரீரத்தை எடுத்துவிடுவதாக ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் லோகாந்தரத்தில் இன்பதுன்பங்களை யார் அனுபவிப்பார்கள்? ஜீவன் இந்த சரீரத்தை விட்டதும் மற்றோர் யாதநாசரீரத்தைப் பற்றிக்கொண்டு லோகாந்தரம் சென்று அங்கு இன்பதுன்பங்களை தம் தம் புண்யபாபங்களுக்கேற்றவாறு அனுபவித்துவிட்டு பூர்வம் ஸம்பாதிக்கப்பட்ட மற்ற கர்மாக்களின் பயனை அனுபவிப்பதற்காக இவ்வுலகு வந்துசேருகிறான். லோகாந்தரத்திலேற்படும் சரீரத்தைக் காட்டிலும் இவ்வுலகிலேற்படும் சரீரம் வேறேயொழிய ஒன்றல்ல. இவ்விஷயத்தை நன்குணரும்பக்ஷத்தில் முற்கூறியசங்கைக்குச்சிறிதுமிடமேற்படாது. ஸ்வர்க்கநரகங்களில் ஸுகதுக்கங்களை யனுபவிக்கும் ஸமயத்திலுங்கூட புத்திராதிகளால் செய்யப்படும் சிராத்தாதிகளால் திருப்திஸுகமும் பிதிருகணமூலமாகவேற்படுவதில் என்ன விரோதம்? இதற்காக லோகாந்தரமில்லையென்றும், தேஹத்தைக்காட்டிலும் ஜீவாத்மா வேறில்லையென்றும் சொல்லிவிடக்கூடாது. இவ்விஷயத்தையும் சுருதி ஸ்மிருதி யுக்திவாத மூலமாக நிர்ணயம் செய்வது பெரியதல்ல.

अयं लोको नास्ति परइति मानी पुनः पुनर्वशमापद्यते मे ।

"இந்த உலகமே உண்மையானது, இதற்கன்யமாய் வேறுஉலகம் இல்லவேஇல்லையென்று எண்ணுகிறவன் அடிக்கடி என்னிடமகப் பட்டுக்கொண்டு துன்புறுகிறான்" என்று தர்மராஜன் நசிகேதஸ்ஸுக்கு உபதேசித்திருக்கும் கடவல்லீ வாக்கியத்தினாலேயே ஸ்வர்க்கநரகங்களில்லை என்று சொல்லிக்கொண்டு மிக்கபாபங்களையும் துணிந்துசெய்துகெட்டழியும் தற்காலத்தியவர்களின் வசனமெல்லாம் மோஹத்தால்தானென்பது விளங்கவில்லையா? இவ்விஷயத்தை மீண்டுமாங்காங்கு நிரூபிப்பாம். இப்படிப்பட்ட வசனங்களெல்லாம் கட்டுக்கதை என்பதும் கூடாது.

ஆகையால் சிராத்தத்தைச்செய்யவேண்டியது அவச்யமென்றிதுவரையில் நிரூபிக்கப்பட்டது. இவ்வாறே தர்ப்பணவிஷயத்திலும் ஊஹித்துக்கொள்ளவேண்டும். அன்னசிராத்தம் செய்ய முடியாதவர்கள் சிராத்தம் செய்யவேண்டிய தினத்தில் ஆமசிராத்தத்தையோ அல்லது ஹிரண்யசிராத்தத்தையோ அல்லது திலதர்ப்பணத்தையோ அவசியம் செய்யவேண்டுமென்பது சாஸ்திரஸித்தாந்தமாகும். அமாவாஸ்யை முதலிய காலங்களில் செய்யவேண்டிய சிராத்தத்தைமட்டிலும் திலதர்ப்பணரூபமாகச் செய்யலாமேயொழிய ப்ரத்யாப்தீகசிராத்தத்தை அவ்விதம் செய்வதற்கு சாஸ்திரமிடங்கொடுக்கவில்லை. அமாவாஸ்யை, ஸங்கிரமணம் முதலிய புண்யதினங்களில் செய்யவேண்டிய சிராத்தத்தை தர்ப்பணரூபமாகச் செய்யலாமென்பது அடியிற்கண்ட ஸ்மிருதி வசனங்களால் வெளியாகின்றது. அதாவது

दर्शे स्नात्वा पितृभ्यस्तु दद्यात्कृष्णतिलोदकम् ।
अन्नं च विधिवद्दद्यात्सन्ततिस्तेन वर्द्धते । दर्शश्राद्धमतिक्रम्य योभुङ्क्ते तुनराधमः । चण्डालत्वमवाप्नोति जन्मानि नव पञ्चच ॥

என்று கார்ஷ்ணாஜினிமகரிஷியும்,

वसित्वा वसनं शुक्लं स्थलआस्तीर्णबर्हिषि ।
विधिज्ञस्तर्पणं कुर्यात् सर्वान्पितृगणांस्तथा ॥

என்று ஹாரீதரும்,

उपरागे पितृश्राद्धे तीर्थेऽमायां च संक्रमे ।
निषिद्धेपि हि सर्वत्र तर्पयेत्साक्षतैस्तिलैः ॥

என்று மரீசியும்,

आवाह्य पूर्वं तन्मन्त्रैः आस्तीर्य च कुशांश्शुभान् ।
गोत्रनामस्वधाकारैः तर्पयेदनुपूर्वशः ॥

என்று யோகயாக்ஞவல்க்யரும்,

तिलोदकैः पितृन्वापि तर्पयेत्स्नानपूर्वकम् ।

என்று மற்றொருவரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மாதாபிதாக்கள் உயிருடனிருக்கும்போது அவர்களுக்குச் சுச்ரூஷை செய்து திருப்திசெய்விக்கவேண்டுமேயொழிய தர்ப்பணத்தால் செய்விப்பது சாஸ்திரீயமாகமாட்டாது. அப்படி உயிருடன் கூடிய மாதாபிதாக்களுக்குச் செய்யப்படும் சுச்ரூஷையும் தர்ப்பணமென்ற பதத்துக்கு அர்த்தமில்லை. இப்பதத்தை "பங்கஜம்" முதலிய பதங்களைப்போல் "யோகரூடம்" என்றல்லவா அறிஞர் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

न जीवपितृकः कुर्याच्छ्राद्धं दर्शादिचोदितम् ।

என்றல்லவா தர்மசாஸ்திரவசனங்கள் முறையிடுகின்றன. ஆகவே மாதாபிதாக்கள் உயிருடனிருக்கும்போது அவருக்கு த்ருப்தியாயிருக்கும் காரியத்தைச் செய்வதுதான் தர்ப்பணமென்பதும் சாஸ்திரஆராய்ச்சிக் குறைவதாலேயேதான் என்று ஸித்தம்.

இவ்விஷயம் ஸ்மிருதிகளிலும்

जीवतोर्वाक्यकरणात्प्रत्यब्दं भूरिभोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥

என்ற வசனத்தால் மாதாபிதாக்கள் உயிருடனிருக்குங்காலத்தில் அவர்களின் வசனத்தைக் கீழ்ப்படிந்து நடப்பதும் இறந்தபிறகு வருஷந்தோறும் சிராத்தம் முதலியவை செய்வதும் கயை என்ற க்ஷேத்திரத்தில் அவர்களுக்குப் பிண்டதானஞ்செய்வதுமாகிய இம்மூன்று காரியத்தால்தான் உண்மைப்புதல்வனாவான் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வபிப்பிராயத்துக்கிணங்கவேதான்

एष्टव्या बहवः पुत्राः यद्येकोऽपि गयां व्रजेत् ।

என்று ஸ்மிருதிவசனமும் ஏற்பட்டிருக்கின்றது. கபிலமஹரிஷியின் கோபாக்னியில் சலபம்போல் விழுந்து பஸ்மீபாவத்தையடைந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பிதாமஹர்களைக் கரையேற்றி நல்லஉலகம் செல்லும்படியாக எடுத்துக்கொண்ட பகீரத சக்கிரவர்த்தியின் மஹாப்பிரயத்தினமொன்றே. பிதாமாதாக்களுக்குத் தர்ப்பணம் செய்வது மிகவும் அவசியம் என்பதற்கு முக்கியப்பிரமாணம். மனுஸ்மிருதியும்

यदेव तर्पयत्यद्भिः पितॄन्स्नात्वा द्विजोत्तमः ।
तेनैव कृत्स्नमाप्नोति पितृयज्ञक्रियाफलम् ॥

என்று தர்ப்பணம் செய்யவேண்டுமென்னும் விஷயத்தை பிரதிபாதிக்கின்றது. நமது மதத்தில் கிருஹஸ்தனிடமிருந்து உபகாரத்தை எதிர்பார்ப்பவர்கள் பலருண்டு. ரிஷிகள், பிதிருக்கள், தேவர்கள், மனிதர்கள், அதிதிகள் இவர்களை தினந்தோறும் திருப்தியடையும்படி செய்யவேண்டியது ஒவ்வொரு கிரஹஸ்தனுக்கும் முதற்கடமையாகும்.

இவ்விஷயத்தை பிருஹதாரண்யகோபனிஷத்தில் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது

अथो अयं वा आत्मा सर्वेषां लोकः स यज्जुहोति यद्यजते तेन देवानां लोकः अथ यदनुब्रूते तेन ऋषीणां अथ यत्पितृभ्यो निपृणाति, यत्प्रजामिच्छेत तेनपितॄणां, अथयन्मनुष्यान्वासयते, यदेभ्योशनंददाति, तेन मनुष्याणां, अथयत्पशुभ्यस्तृणोदकं विन्दति तेन पशूनां, यदस्य गृहेषु श्वापदाः वयांसि आपिपीलिकाभ्य उपजीवन्ति तेन तेषां लोकः, यथा - हवै स्वायलोकायारिष्टिमिच्छेदेवं हैवंविदेसर्वाणि भुतान्यरिष्टि मिच्छन्ति, तद्वारातद्वितं मीमांसितम् ॥ என்று இந்த சுருதியிலிருக்கும் यत्पितृभ्योनिपृणाति என்ற அம்சத்தால் மாதாபிதாக்களுக்கு சிராத்தம், தர்ப்பணம் முதலியவை அவசியம் செய்யவே வேண்டுமென்பது தெரியவில்லையா? பூதயக்ஞம், மனுஷ்யயக்ஞம், பிதிருயக்ஞம், தேவயக்ஞம், பிரும்மயக்ஞம் என்ற பஞ்சமஹாயக்ஞங்களையும் அவசியம் செய்யவேண்டுமென்பதும் இச்சுருதிமூலமாகப் புலப்படவில்லையா? இதனால் சிராத்தம் முதலியவை செய்வதற்கு சுருதி பிரமாணமில்லையென்பதும் அகன்றுவிட்டது. இவ்விஷயத்தி

வின்னமும் பல சுருதிகளுண்டு. அவைகளை அங்குள்ளவர்களிடம் கேட்டுக்கொள்ளவும்.

சிராத்தத்தைப்பற்றி இன்னம் எவ்வளவோ கேள்வி கேட்பதுண்டு. ஸம்ஸ்கிருதபாஷையால்தான் சிராத்தம் செய்யவேண்டுமென்பது எதற்காக? சிராத்தத்தில் நம்மவரால் உச்சரிக்கப்படும் மந்திரங்கள்வெகுதூரத்திலிருக்கும் பிதிருக்களுக்குஎப்படிக்காதில் விழும்? ஒரே ஸமயத்தில் அனேக சிராத்தத்தை அவர் எப்படி பெற்றுக்கொள்ளக்கூடும் என்றிவ்வாறாக நிகழும் ஆக்ஷேபங்களுக்கெல்லாங்கூட ஸமாதானத்தைத் தாமே ஊஹித்துக்கொள்ளவும். ஸம்ஸ்கிருதபாஷைதான் தேவர்களுக்கும் பிதிருக்களுக்குமியற்கையாயமைந்த பாஷையாகும். பிதிருக்களுக்கு எப்பாஷையில்சொன்னாலும் தெரிந்துகொள்வதற்கு யோக்யதையிருப்பினும் அவர்களுடைய ஸம்ஸ்கிருதபாஷையால் சிராத்தம் செய்வதுதான் உசிதம்.

பிதிருக்கள் முதலியவர்களுக்கு அணிமாதியோகஸித்திகள் இயல்பாகவே அமைந்திருக்கின்றமையால் அச்சக்திவிசேஷத்தால் அனேக சரீரத்தை ஒரேகாலத்தில் எடுத்துக்கொண்டு பலவிடங்களில் நடக்கும் யாகம், சிராத்தம் முதலிய கர்மாக்களில் கொடுக்கப்படும் ஹவ்யகவ்யங்களையும் ஹவிர்பாகங்களையும் கிரஹித்துக்கொள்வது முடியாதா?

இவ்விஷயத்தை பிரும்மஸூத்திரம் 1—3—27-ல் காண்க.

ஆதலால் சிராத்தத்தின் ஸ்வரூபத்தை தர்மசாஸ்திரங்களாலும், அதையனுஸரித்த யுக்திவிசேஷத்தாலும் நன்கு நிச்சயித்துக்கொண்டு சிராத்தஞ் செய்யவேண்டியதில்லை என்ற விபரீத எண்ணத்தைத் திருத்திக்கொள்ளவும்.

## ஸ்மிருதிபுராண தத்துவவிமரிசம்.

இனி புராணத்தைப்பற்றிப் பேசத்துடங்குவாம். சர்மாவானவர், "நமது நண்பர் புராணத்தைப்பிரமாணமாக, நம்பவில்லை, புராணம் வேதவிருத்மாகவும், இயற்கை விருத்தமாகவுமிருக்கின்றது. ஸ்வல்பகாலத்துக்கு முன்பு ரிஷிகளின்பேரால் சுயநலங்கருதிய சிலபிராம்மணரால் எழுதப்பட்டது. வேதமூலமாகவெளியாகும் காரியத்தைத்தவிற புராண, ஸ்மிருதிஸித்தமாகிய காரியத்தை செய்யவேமாட்டார். வேதமொன்றைத்தவிற மற்றவைப் பிரமா

ணமாகமாட்டாது" என்று கூறுவதாக எழுதியிருக்கிறார். இதுவுமாராய்ச்சிக்குறைவாலேயேதான்.

வேதத்தைப் பிரமாணமாக நம்புமிவர் புராணமேன்பிரமாணமில்லை என்று சொல்லவேண்டும். வேதத்தைமட்டிலுமாவது இவர் பிரமாணமாக ஒப்புக்கொண்டிருப்பதுமாஸ்திகர்களின் பெரும்பாக்கியமேயாகும். புராணத்தைப் பிரமாணமில்லையென்று வாய்கூசாமல் பேசுமிவர் வேதத்தையுமவ்வாறே அப்பிரமாணமென்று சொல்வதற்கு எவ்வளவு நாழிகையாகும். எதன்மூலமாகவேதம் பிரமாணமென்று இவர் நம்பிக்கைவைக்கின்றாரோ அதன் மூலமாகவே புராணமும் பிரமாணமாக ஸித்திக்கமாட்டாதா? இவர்வேதந்தான் பிரமாணம், மற்றவையல்லவென்று ஸித்திசெய்வதற்கு யாதொருப்பிரமாணமும் எடுத்துக்காட்டாமலிருப்பது, ஸாஹஸமேயாகும். இவ்விஷயத்தைத்தான் இவர் விஸ்தரித்துக் கூறியிருக்கவேண்டும், இதை விஸ்தாரமாகச் சொல்லாமல், வேதத்தைத்தவிற மற்றவைப் பிரமாணமில்லை என்று பிரதிக்ஞையைமட்டிலும் செய்துவிட்டால்தமது கருத்து ஸ்திரமாக நிலைத்துவிடும் என்று எப்படி எண்ணமுடியும்? நிற்க. வேதந்தான் பிரமாணமென்று கூறுமிவரை வேதத்திற்கும் பிராமாண்யமெவ்விதமென்று முதலாவது வினவுவாம். ஈசுவரனுலுச்சரிக்கப்பட்டதால் வேதம் பிரமாணந்தானென்றால் இவர் வேதமின்றி ஈசுவரனை எப்படிக் கண்டுகொண்டாரோ தெறியவில்லை. ஆகவே, வேதத்தால் ஈசுவரனொருவனுண்டென்று அறிந்துகொண்டபிறகல்லவா? அவ்வீச்வரனுலுச்சரிக்கப்பட்ட வேதத்திற்கு பிராமாண்யம் ஸித்திக்கும். அன்றியும் வேதம் ஒருவராலுமியற்றப்படாதது என்ற அபௌருஷேயவாதமும் அஸங்கதமாகும். அவ்விதமே ஒப்புக்கொள்வோமானால் புராணங்களையுமீசுவரன்தான் ஸிருஷ்டித்ததாக ஒப்புக்கொண்டு அவைகளையும் பிரமாணமாகவே ஒப்புக்கொள்வதில் என்ன தடை? புராணங்களை ஈச்வரன் ஸிருஷ்டிக்கவில்லை, யாரோ எழுதிவிட்டார்கள் என்று கண்முடித்தனமாய் எழுதுவதும் பொருந்தாது. வேதத்தையும் அவ்வாறே யாரோ எழுதிவிட்டதாகச் சொல்லமுடியாதா? வேதமனாதிநித்யமானதால் அது பிரமாணமென்றால் அவ்விதமே புராணங்களையும் ஏன் அனாதியென்றும் நித்தியமென்றும் சொல்லக்கூடாது? புராணங்களை சில நூற்றாண்டுகளுக்குமுன்பு பராசரபுத்திராகிய

வியாஸர் எழுதியிருக்கிறாரேயொழிய ஈசுவரன் ஸிருஷ்டிக்கவில்லை என்றால் அவ்வாறே வேதத்தையும் "மதுச்சந்தஸ், சுநச்சேபர், விசுவாமித்திரர்" முதலிய பல பிராம்மணர்களே இயற்றிவிட்டதாக ஏன் சொல்லமுடியாது?

"अस्य महतो भूतस्य निश्वसितमेतत् ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्वांगिरसः"

"यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै"

"तस्मा यज्ञात्सर्वहुत ऋचस्सामानि जज्ञिरे ।
छन्दांसि जज्ञिरे तस्माद्यजुस्तस्मादजायत ॥
श्रुतिस्स्मृतिर्ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते । आज्ञाच्छेदी मम द्रोही ॥
अनादिनिधना नित्या वागुत्सृष्टा स्वयंभुवा ।
आदौ वेदमयी दिव्या यतस्सर्वाः प्रवृत्तयः ॥

என்ற சுருதிஸ்மிருதிகளால் வேதம் ஈசுவரனால் இயற்றப்பட்டதென்று தெரிகிறதென்றால் அதே சுருதிஸ்மிருதிகளால் ஸ்மிருதி புராணாதிகளையும் ஈசுவரனே ஸிருஷ்டித்ததாகத் தெரியவில்லையா? अथर्वांगिरस इतिहासः पुराणं विद्याः என்பதாதி வசனமும் அவ்வாக்கியத்தையடுத்தே பிரகாசிக்கின்றதல்லவா? योब्रह्माणं என்ற சுருதியிலும் वेदांश्च என்று வேதம் புராணம் முதலியவைகளையும் அவர் கொடுத்தாரென்றல்லவா தெரிகிறது. அங்குள்ள च காரத்துக்குப் புராணாதிகள் என்றல்லவா அர்த்தம்? ஆகவே புராணம் பிரமாணமா இல்லையா என்ற பிரச்னத்துக்கும் இந்த சுருதிகளே ஸமாதானத்தைக் கொடுத்துவிடும். சுருதியைத்தவிர வேறு ப்ரமாணத்தை நம்பாதவராகிய சர்மாவானவர் புராணாதிகள் பிரமாணமென்று சுருதிவாயிலாகவே ஸித்திப்பதை எப்படி அங்கீகரிக்காமலிருப்பார். அன்றியும்இரண்டு தத்வமாகும்.

நமது ஹிந்து ஸமயத்தில் ஈசுவரனெப்படி நித்யனோ அப்படியே வேதமும் நித்தியந்தான். ஈசுவரனுங்கூட வேதத்தை புதிது புதிதாக குயவன் குடத்தை ஸ்ருஷ்டிப்பிப்பதுபோல் ஸ்ருஷ்டிப்பதாக சுருதிஸ்மிருதிகளின் அபிப்பிராயமல்லவென்றால் மகரிஷிகளும், மற்றுமுள்ள ஜீவர்களும், அதை எழுதிவைக்கவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ? இக்காரணத்தால்தான்

निश्वसितं என்றும், उत्सृष्टा என்றும் சுருதிஸ்மிருதிகளில் பதப் பிரயோகம் பண்ணப்பட்டிருக்கிறது. இதனாலேயே தான்,
" औत्पत्तिकस्तु शब्दस्यार्थेन संबंधः " என்று ஜைமினி ஸூத்திரமும் பிரவர்த்திக்கின்றது. பிரும்மசூத்திரசாங்கரபாஷ்யத்தாலும் அதனுரையாசிரியராகிய வாசஸ்பதிமிசருடைய,

सर्वशक्तिज्ञानस्यापि परमात्मनो वेदानां कर्तुरपि न तेषु स्वातन्त्र्यं पूर्वपूर्वसर्गानुसारेण तादृशतादृशानुपूर्वीविरचनात् "

" परमेश्वरःस्वकृतपूर्वकल्पीयक्रमसजातीयक्रमवन्तं वेदराशिं तदर्थंच युगपज्ज्ञानन्नेव करोतीति न वेदस्य पौरुषेयत्वम् "

என்ற வசனத்தாலும்

युगान्तेऽन्तर्हितान्वेदान्सेतिहासान्महर्षयः ।
लेभिरे तपसा पूर्वमनुज्ञाताः स्वयंभुवा ॥

என்ற ஸ்மிருதியில் आतर्हित பதஸ்வாரஸ்யத்தாலும்,

शर्वर्यन्ते प्रसूतानां तान्येवेभ्यो ददात्यजः ।

என்ற ஸ்மிருதியாலும் இவ்விஷயம் ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது. இதனாலெல்லாம் வேதம் பிரளயகாலத்திலும், அழியக்கூடியதல்லவென்பது திண்ணம். மகரிஷிகளும், பூர்வபுண்யவசத்தாலும், அவ்விசுவரனுடைய அனுக்ரஹத்தாலும், வேதத்தைக் கண்டுபிடித்தவர்களேயொழிய உண்டுபண்ணினவர்களல்ல. அதிகம்பிரமாயுள்ள வேதார்த்தத்தை வித்வான்களாலும் விற்பத்திபலத்தால் மட்டிலும் அறிந்து கொள்வது இயலாததால், உள்ளபடி அதனுண்மைப் பொருளை உணர்ந்துகொள்வதற்காக சிக்ஷை வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பசூத்திரம், இதிஹாஸ, புராணம், ஸ்மிருதி இவை முதலியவற்றை முதலில் பயில வேண்டும். வேதமானது "நீ இதனைச் செய் இஃதையுபாசிப்பாயாக ? இவற்றை அறிவாயாக" என்பதாதி கர்மோபாஸன ஞான விஷயங்களை ராஜாக்ஞையைப்போல் போதிப்பதாயுள்ளது. அவை பிரத்யாக்ஷானுமானங்களால் கண்டுக்கொள்ளக்கூடியவைகளல்ல. அத்தகைய விஷயங்களை "செய்" என்பதாதி சொல்மாத்திரத்தால் அனுஷ்டித்து வருவது அஸாத்தியமானதுபற்றியே, அதற்கு ஸாதகங்களாயும் விவரணங்களாயுமிருக்கும் இதிஹாஸ புராணங்களும் அவசியமேயாகும்.

வேதத்தில் ஸந்தியாவந்தனம் செய்யவேண்டுமென்று விதித்திருந்தால் அதனை என் செய்யவேண்டும். எப்படிச் செய்யவேண்டும் செய்யாவிட்டால் கெடுதி எப்படி உண்டாகும் என்பதாதி சந்தேகங்களை நீக்கும்பொருட்டு, எதாவதொரு கதையைச் சொல்லியும், காரணங்களையும், சினேகிதனுடைய வசனம்போல் பிரவர்த்தித்திருக்கும் இதிஹாஸ புராணங்களை அப்பிரமாணமாக எப்படிக் கருத முடியும். இதிஹாஸபுராணங்களை வாசிக்காமல் வேதார்த்தத்தை எப்படி நாம்தெறிந்துகொள்ளமுடியும். இதையனுசரித்துதான்

"इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्"

என்ற ஸ்மிருதியும் வேதார்த்தத்தையறிந்துகொள்வதற்காக இதிஹாஸபுராணங்கள்வசியமே என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அன்றியும் புராணங்கள் முதலியவை பிரமாணமில்லையென்றால் வேதத்திலேயே பிரும்மயக்ஞப்பிரகாணத்தில்

"ब्राह्मणानितिहासान्पुराणानि कल्पान्गाथा नाराशंसीः"

என்ற வசனத்தால் இதிஹாஸபுராணசப்தங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவே. ஆனால் இந்த சப்தங்களெல்லாம் வேதவ்யாஸரால் இயற்றப்பட்ட 18புராணங்களையும் பாரதம்முதலிய இதிஹாஸங்களையும், தெரிவிக்கவில்லை. வேதத்தின் பிராம்மணபாகத்திலேயே அவாந்தரமாய் அடங்கியுள்ள இதிஹாஸ புராணாதிகளைப் பற்றியது என்ற விசேஷமுண்டென்று சொல்வதும் சரியல்ல. அவ்வேதங்களின் பிராம்மண பாகத்திலடங்கியிருக்கும்இதிஹாஸ புராணங்களையே ஏனைய இதிஹாஸபுராணங்கள் விரிவாய்க் கூறுகின்றதால் இச்சுருதியிலுள்ள இதிஹாஸ புராண பதங்களுக்குப் பொதுவான அர்த்தத்தைக் கூறினும் தோஷமின்றும். ஆகவே வேதங்களாலேயே புராணம் முதலியவை பிரமாணமென்று ஸித்திக்கவில்லையா?

சர்மாவின் நண்பர் வேதத்திலிருந்து எல்லாவிஷயங்களுக்கு மாதாரம் எடுத்துக்காட்ட வேண்டுமென்றும், அப்படி ஸித்திக்கப்பட்ட காரியத்தைத்தான் செய்வேனென்றும், பிடிவாதம் பண்ணுவதும் கூட ஸரியல்ல. எல்லாவற்றிற்கும் வேதப்ராமாணத்தை எடுத்து ஆதரிக்க யாரால் முடியும். வேதங்களில் சில காரியத்தை ஸ்பஷ்டமாயும், சிலவற்றை ஜாடையாயுந்தான் அறி

விக்கப்படுமே யொழிய எல்லாவற்றையும் ஸ்பஷ்டமாய் விதிப்பதில்லை. அப்படி ஜாடையாக வேதவிஹிதமாயுள்ள காரியங்களை ஸ்பஷ்டமாயும் விரிவாயும், வெளியிடுவதற்குத்தான் மனு, யாக்ஞவல்க்யர், வியாஸர், முதலிய மகரிஷிகளால் தர்மசாஸ்திரங்கள் இயற்றப்பட்டன. அவ்விதமே புராணங்களும் வரையப்பட்டன. இவற்றையெல்லாம் சுயநலம் கருதிய சில பிராம்மணர்கள் ரிஷிகளின் பெயரால் செய்துவிட்டார்களென்பதும் தவறு. அப்படியே அவர்களின் ரிஷிகளின் பெயரால் செய்திருப்பதாகவே அந்த ஸ்மிருதி இதிஹாஸ புராணாதிகளை நம்பினாலுங் கூட அவைகளில் சொல்லப்படும் விஷயம் வேத விருத்தமாயிராதபக்ஷத்தில் அவைகளை வேதத்திற்கு அடுத்தபடியாயுள்ள பிரமாணமாக அங்கிகரிப்பதில் என்னதோஷம். வேதத்திற்கு விரோதமில்லாமல் யார் எதைச் சொன்னாலும் எழுதினாலும் அவையனைத்தும் தர்மமேதான் என்றல்லவா வைதிகஸித்தாந்தம். வேதத்தில் சொல்லியிருக்கும் ஸந்தியாவந்தனத்தையே தற்காலத்திலுள்ள யாராவது செய்யவேண்டியது அவசியமென்று கூறினால் தற்காலத்தியவர் கூறிய அந்த ஸந்தியாவந்தனம் தர்மமில்லை என்று ஒப்புக்கொள்வது ஸரியாகுமா ?

அன்றியும் மகரிஷிகள் வேதத்தை அர்த்தத்துடன் பிரத்தியக்ஷமாய் முதலில் அறிந்து பிறகு அதன் மூலமாக தமக்கேற்பட்ட அனுபவத்தைக்கொண்டு ஸ்மிருதிகிரந்தங்களை இயற்றினார்களென்று நிரூபித்திருக்கும்

“ श्रुतिं पश्यन्ति मुनयः स्मरन्ति च तथा स्मृतिम् ”

மனுஸ்மிருதிவசனத்தால் மகரிஷிகளே வேதார்த்தத்தை விவரிப்பதற்காக ஸ்மிருதி இதிஹாஸாதி கிரந்தங்களைச் செய்தார்களென்று புலப்படவில்லையா ? புராணங்களாலும், ஸ்மிருதிகளாலும் வெளியிடப்பட்ட தர்மாதர்மக்ஞானோபாஸநங்களுக்கும் வேதோக்தமாயிருக்கும் அவைகளுக்கும் ஏதாவது வித்யாஸமுண்டா ? அத்தகைய அர்த்தத்தை அறிவிக்கும் புராணக்ரந்தங்கள் நூதனமென்றே ஒப்புக்கொண்டாலும் அதனின்றும்வெளியாகும் அர்த்தத்திற்கும் வேதத்தினின்றுமுண்டாகும் அர்த்தத்திற்கும் சிறிதும் பேதமில்லை என்பது மீமாம்ஸா ஸித்தாந்தமாகும். அங்ஙனமே வியாகரண மஹாபாஷ்யக்காரராகிய பதஞ்சலி பகவானும்

"வர்ணஸமுதாய வடிவமாயுள்ள சப்தமநித்யமேயொழிய, அதனர்த்தம் அநித்தியமல்ல. அது நித்தியசித்தமேயாகுமெ"ன்று கூறியிருப்பதும் அறியவேண்டும்.

அன்றியும் வேதத்தைமட்டிலும் அர்த்தவிசாரஞ்செய்து வைதிககர்மாக்களையனுஷ்டிக்கும் சக்திவாய்ந்த உத்தமாதிகாரிகளுக்கு தர்மசாஸ்திரபுராணாதிகளை அர்த்தவிசாரஞ்செய்வது அவசியமில்லையென்றொருவாறு ஒப்புக்கொண்டாலுங்கூட மந்தமத்யமாதிகாரிகளுக்கு ஸ்மிருதிபுராணாதிகளைக்கொண்டுதான் வேதார்த்தநிச்சயமேற்படவேண்டும். ஆதலால் அவ்வேதார்த்தத்தை மந்தமத்தியமாதிகாரிகளுக்குத் தகுந்தபடி விரிவாய் வெளியிடும் தர்மசாஸ்திரபுராணாதிகளை மந்தமத்தியமாதிகாரிகளாகிய நம்மவர் எப்படி அப்பிரமாணமென்று கூறுவது? வேதார்த்தத்திலேற்படும் ஸந்தேகம், விபரீதம் முதலியவைகளை விலக்குவதற்காக ஸ்மிருதி இதிஹாஸாதிகளவசியந்தான். ஆனால் வேதத்திற்கு விருத்தமாயிருக்கும் ஸ்மிருதீதிஹாஸபுராணங்களை அப்பிரமாணமென்றொப்புக்கொள்வதில் ஆஸ்திகர்களுக்குச் சிறிதுமாக்ஷேபமேயில்லை. மனுமுதலிய சாஸ்திரங்களும் புராணாதிகளும் வேதமூலமல்லவா? புராணாதிகளில் எதாவது வேதவிருத்தமாகிய தந்திரசாஸ்திரார்த்தம் நிரூபிக்கப்பட்டிருக்குமேயானல் அந்த விஷயத்தில்மட்டிலும் அவை அப்பிரமாணமென்றும் தைரியமாய்ச் சொல்லிவிடலாம். வியாஸாசாரியாளுடைய அபிப்பிராயம் வேதோக்தமில்லை என்று சொல்வது சரியல்ல. ஆகவே அவர் வேதவிருத்தமாயுள்ள ஸாங்கியயோகாதிமதங்களில் வேதவிருத்தாம்சத்தில் அவை அப்பிரமாணமென்றும், வேதவிருத்தமில்லாதவிஷயத்தில் பிரமாணமென்றுமிருவிதமாக ஒப்புக்கொண்டிருப்பதால் ஸ்மிருதீதிஹாஸ புராணாதிகளிலும் அவ்விதமே இருவிதமாக ஒப்புவது தோஷமற்றதேயாகும். அப்படியே

वेदमूलानि शास्त्राणि मन्वादीनि महांति च ।
पुराणादिनि सर्वाणि तस्माद्वेदं समाश्रयेत् ॥
वेदमुलतया तानि प्रकृतान्यपि सत्तम ।
ब्रुवन्ति वेदबाह्यार्थं कदाचिच्च कचित्काचित् ॥
भाति प्रत्यक्षवेदेन यद्विरुद्धतया शुक ।
वैदिकैस्तत्परित्याज्यं नैव ग्राह्यं कदाचन ॥

अक्षपादप्रणीते च काणादे सांख्ययोगयोः ।
त्याज्यः श्रुतिविरुद्धांशः श्रुत्येकशरणैर्नृभिः ॥
जैमिनीये च वैयासे विरुद्धांशो न कश्चन ॥
श्रुत्या वेदार्थविज्ञानाच्छ्रुतेः पारं गतो हि तौ ।
बौद्धमार्होदितं शास्त्रं लोकायातकसंज्ञितम् ।
पाषण्डमपरं शास्त्रं वैदिकस्तु परित्यजेत् ।
वेदबाह्यागमान्त्रह्मन् वेदबाह्यांश्च वैष्णवान् ।
वेदबाह्यांस्तथान्यांश्च गृण्हीयान्नैव वैदिकः । என்றும்
या वेदबाह्याःस्मृतयः याश्च काश्च कुदृष्टयः ।
सर्वास्ता निष्फलाः किंच तमोनिष्ठा हि तास्स्मृताः ॥

என்றும் ஸ்மிருதிகளைக்கொண்டும் கீழ்க்கண்ட விஷயம் காண்க.

द्विभाषाभिज्ञवच्छास्त्रं मन्दबुद्ध्यनुसारतः ।
वेदार्थस्फारकं यस्य प्रामाण्यं केन वार्यते ॥
एवं स्मृतिपुराणेतिहासानां च प्रमाणता ।
नस्वातंत्र्यात्त्र सर्वज्ञमुनिकर्तृकताबलात् ॥

என்றதால் சுருதிகளுக்கு விரோதியாயில்லாத ஸ்மிருதிதிஹாஸாதிகளுக்குப் பிராமாண்யத்தில் ஸம்சயமில்லை என்று தோன்றவில்லையா? இக்காரணத்தாலேயேதான் வேதவிருத்தமாகிய பாஞ்சராத்திரம் முதலிய தந்திரசாஸ்திரங்களுக்கும் சார்வாகபௌத்த ஸாங்கியாதி சாஸ்திரங்களுக்கும் பிராமாண்யமில்லை என்று ஸ்மார்த்த வைதிக ஸித்தாந்தம்.

ஆகையால்தான் விரோதாதிகரணத்தில் ஜைமினிமாமுனிவரால் பிரத்தியக்ஷசுருதிவிருத்தமாகிய ஸ்மிருதிகளுக்கு அப்பிராமாண்யவியவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது.

இதை அனுசரித்தே தான்

श्रुतिस्मृतिपुराणेषु विरुद्धेषु परस्परम् ।
पूर्वं पूर्वं बलीयस्स्यादिति न्यायविदो विदुः ॥

என்று ஸங்கிரஹக்காரரும் சுருதிவிருத்தஸ்மிருதிகள் பிராமாணம் இல்லை என்றும் ஏதாவது விரோதம் நேரிட்டால் மூலப்பிராமாணமாகிய சுருதியைத்தான் ஆதரிக்கவேண்டுமென்றும் அபிப்பிரா

யப்படுகின்றார். இதைப்போலவே ஸ்மிருதியாசாரப் பிராமாண்யத்தை வியவஸ்தை செய்யும் ஜைமினீய ஸூத்திரத்தாலும் இவ் விஷயம் விரிவாய்க் காணலாம்.

ஸ்மிருதிகளுக்கடுத்தபடியாயுள்ளப் பிரமாணமாகவல்லவா புராணங்களை அறிஞர் அங்கீகரித்திருக்கின்றனர்.

புராணங்களுக்கும் ஸ்மிருதி கிரந்தங்களுக்கும் பேதமென்பது சாஸ்திரீயமாகா. ஆனதால் ஸ்மிருதிகளைப் பிரமாணங்களாக ஸ்தாபித்து விடும்பக்ஷத்தில் புராணங்களையும் அதன் மூலமாக பிரமாணமென்று ஸ்தாபித்துவிட்டதாகவே ஏற்பட்டுவிடும். அன்றியும்,

पुराणं मानवो धर्मः साङ्गो वेदश्चिकित्सितम् ।
आज्ञासिद्धानि चत्वारि न हन्तव्यानि हेतुभिः ॥
पुराणन्यायमीमांसाधर्मशास्त्रांगमिश्रिताः ।
वेदास्स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश ॥
अष्टादशसहस्राणि मुनयो गृहमेधिनः ।
एतैर्यानि प्रणीतानि धर्मशास्त्राणि वै पुरा ॥
तान्यतानि प्रमाणानि न हन्तव्यानि हेतुभिः ।
सूत्रभारतपुराणसंहिताधर्मशास्त्र मुख मार्षभाषितम् ॥
मानतां स्मृतितया प्रयाति यन्मूलकं सानिगमस्तु किंपुनः ।

இவை முதலிய ஸ்மிருதிகளாலும் புராணாதிகளுக்குப்பிராமாண்யம் ஸித்தம். புராணம் பிரமாணமென்பதற்கு வேதப்பிரமாணம் முன்பே கூறப்பட்டுளது ஞாபகத்திலிருக்கவேண்டும். இவை போலின்னுமனேக ஸ்மிருதிவசனம் புராணாதிப் பிராமாண்யவிஷயத்தில் எடுத்துக்காட்டமுடியும். அவைப் பிரமாணமில்லை என்பதற்காகத் தான் ஒருவாக்கியங்கூட நண்பர் எடுத்துக்காட்டவில்லை. பிரமாணமில்லைஎன்று சொல்லிவிட்டால் அப்பிரமாணம் புராணமென்று ஸித்தித்துவிடுமா? மகரிஷிகளால் செய்யப்பட்ட ஸ்மிருதீதிஹாஸ புராணாதிக் கிரந்தங்களை எப்படி அப்பிரமாணம் என்று பிரதிக்ஞாமாத்திரத்தினல் ஸ்தாபித்துவிடமுடியும். நமது முன்னோர்களாகிய மனுமுதலிய மகான்களுக்கு நம்மைப்போல் வஞ்சனை, லோபம்,கோபம் முதலிய கெட்ட ஸ்வபாவமிருப்பதாக

கற்பனை செய்வது தகாது. நமது மகரிஷிகளோ அறியவேண்டியவைகளை எல்லாமுணர்ந்தவர்கள். தர்மாதர்மங்களைப் பிரத்தியக்ஷமாய் அறிந்தவர்கள். ஸர்வேச்வரனுடைய அனுக்கிரஹஸித்தி பெற்றவர்கள். கத்திமுனையில் பழகுவதுபோல் வைதிகதர்ம மார்க்கத்தை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து பரிபாலித்துக் கொண்டு தாமனுஷ்டிக்கும் விதமாகப் பிறரையும் அனுஷ்டித்துய்யுமாறு தத்துவோபதேசம் செய்யும் காருண்யாஸம் ததும்பிநின்று கொண்டிருக்கும் ஸ்வபாவமுள்ளவர்கள். இத்தகைய மகிமையுற்று விளங்கும் மகரிஷிகளுக்கு கெட்ட ஸ்வபாவம் எப்படி அணுகமுடியும். அவர்கள் தேசத்தையோ காலத்தையோ பிரதிப்பிரயோஜனத்தையோ, லோகஸங்கிரஹக்பாதி பூஜை முதலியவைகளையோ வேறு எதாவதொன்றையோ அனுஸரித்து வேதார்த்தத்தை வெளியிடமாட்டார்கள்.

ऋषिभिर्निश्चिते तस्मिन्का शङ्कास्मान्महात्मनाम् ।

என்றல்லவா ஸ்மிருதிநிச்சயம்.

தைத்தரீயோபநிஷத்திலும் சிஷ்டசம்மதமாகிய காரியத்தையும், வசனத்தையும், ஆசாரத்தையும் அவசியமனுஷ்டிக்கவே வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுளது.

ये तत्र ब्राह्मणाः संमर्शिनः युक्ता आयुक्ताः अलूक्षा धर्मकामाः स्युः यथा ते तत्र वर्तेरन्-तथा तत्र वर्तेथाः

ஆகவே சிஷ்டர்களால் பிரமாணமென்று நிர்விவாதமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதே புராணம் பிரமாணமென்பதற்கு முதற்பிரமாணம். இவர்களையெல்லாம் சிஷ்டர்களல்லவென்று எப்படி நிஷேதிக்கமுடியும்?

" शिष्टाः खलु विगतमत्सराः निरहंकाराः "

என்பதாதி சிஷ்டலக்ஷணமனைத்தும் அவர்களிடம் பூர்ணமன்றோ நமது முன்னோரனைவரும் பெரியோர்களென்ற நம்பிக்கையல்லவா நமக்கு அவசியம் வேண்டும்.

(தொடரும்) வி. ஜகதீச்வரசாஸ்திரிகள்.

# கோவல் வீரட்டானம்

## ஆர்யதர்மாபிவிர்த்தினி பிராம்மணமஹாஸபை.

10—8—30 இன்று மாலை நம் ஸபைகளின் வாராந்தரக் கூட்டம் நடைபெற்றது. நமது ஆர்யதர்மபத்திரிகையில் 20வது ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தபடி இன்று காயத்ரிஜெபதினமானதால் நம் பிராமணஜனஸமூகத்திற்காக இச்சுபதினத்தை ஸ்ரீ வேதவியாசதினமாகக் கொண்டாடி இச்சுற்றுப் பக்கக்களிலுள்ள அக்கிரஹாரங்களிலெல்லாம் ஸநாதன தர்ம, வைதீக சதாசார வர்ணாச்ரம கிரமமுறைகளை அனுஷ்டானத்திற்கு கொண்டுவர ஆங்காங்குள்ள பெரியவர்களைக்கொண்டு தீவிரமுயற்சி செய்வதற்கு வேண்டிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விசேஷதின கூட்டத்திற்கு நம் நகரவாசிகள் பலர் வந்திருந்து ஸபையை நன்கு நடத்தி மிக்க உற்சாகத்தோடு இகபர ஸுகத்திற்கு ஏதுவாகிய வைதீகதர்மமார்க்கத்தின் அபிவிர்த்திக்குழைக்க முன்வரவேண்டுமென்று நம் ஸபையார் பிரார்த்திக்கும் வழக்கம்போல் எதிர்பார்த்தபடி பல முக்கியஸ்தர்கள் ஸபைக்கு விஜயம் செய்யமுடியாமற்போனதற்காக ஸபையார் வருந்தாதிருக்கமுடியவில்லை.

ஆகவே எல்லாம்வல்ல இறைவன் ஸ்ரீபிரகந்நாயிகாஸமேத வீரட்டஹாஸேச்வரன் நம் ஸபையார்கள் மனதிற்புகுந்து பிராமணஸமூக முன்னேற்றத்திற்குப்பொதுவாக ஸனாதனதர்மஸம்ரக்ஷணத்திற்கும் ஈடுபட்டு இகபரசுகமுறச்செய்யுமபடி பிரார்த்திக்கின்றோம்.

17—8—30 இன்று மாலை ஸபைகூடி ஸ்ரீஜயந்தியானபடியால் ஸ்ரீகண்ணபிரானுடைய ஜனனசரித்திரத்தை ஸபைஅங்கத்தினர் பிர்மஸ்ரீ வ. சு. நடேசய்யாவர்கள் உபந்யசிக்க பலர் வந்து சிரவணஞ்செய்தார்கள்.

K. R. சுப்பிரமணியசாஸ்திரி,

காரியதரிசி.